**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 535/2018 |
| Deposition of witness for | : | CW: 1 |
| | | |
| Name | : | ஜோசப்பீட்டர் |
| Father's Name | : | இன்னாசிமுத்து |
| Village | : | |
| Taluk | : | திண்டுக்கல் |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2022

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நானும் எதிரியும் 25.07.2017 ஆம் தேதி ஏற்படுத்திக்கொண்ட பங்குதாரர் ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான். **(25.07.2017 ஆம்தேதிய பங்குதாரர் பத்திரம் பதிவு செய்யப்படாதது அசல் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் Xerox நகல் எ.சா ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
2. நானும், எதிரியும், எதிரியின் மனைவியும் கடந்த 16.03.2018 ஆம் தேதி எழுதிக்கொண்ட பங்குதாரர் ஒப்பந்த ஆவணத்தின் அசல் என்னிடம் காட்டப்படுவதுதான். **(16.03.2018 ஆம் தேதி எழுதிக்கொண்ட பங்குதாரர் ஒப்பந்த ஆவணத்தின் அசல் ஒப்பீடுசெய்யப்பட்டு அதன் Xerox நகல் எ.சா ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
3. நான் கடந்த 17.03.2018 ஆம் தேதி மேற்படி பாரகான் பேசன் நிறுவனத்திடமிருந்து என்னுடைய பங்கை விலக்கிக்கொண்டு Partnership retirement Deed எழுதிக்கொடுத்து மேற்படி நிறுவனத்திடமிருந்து விலகிவிட்டேன். என்னிடம் காட்டப்படுவது அதற்கான ஆவணத்தின் அசல் தான். **(17.03.2018 ஆம் தேதி நானும், எதிரியின் தரப்பிலும் எழுதிக்கொண்ட Partnership retirement Deed -ஆவணத்தின் அசல் ஒப்பீடுசெய்யப்பட்டு அதன் Xerox நகல் எ.சா ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
4. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் எனக்கும், எதிரிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் சமூகமாக இருவரும் கலந்துபேசி 17.03.2018 ஆம் தேதி பாராகான் பேசன் நிறுவனத்திடமிருந்து நான் விலக்கிவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.எ.சா.ஆ-3 ஆவணத்தின்படி சுமூகமாக இருவரும் கலந்து பேசி எழுதிக்கொண்டதில் என்னுடைய கணக்குகள் நேர்செய்யப்பட்டுவிட்டதாகவும், இனிமேல் பாரகான் பேசன் நிறுவனங்ததிற்கும் எனக்கு எந்த தொடர்பும் இல்லையென குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரியும் அவரது மனைவியும் வங்கியில் லோன் வாங்குவதற்காக பெயரளவில் என்னுடைய கணக்கு நேர்செய்ததாக எழுதப்பட்டது.
5. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்குறிப்பிட்ட விவரத்தை நான் எனது புகார் மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பணம் கொடுக்கவேண்டும் என்பது பற்றி மட்டும்தான் சொல்லியுள்ளேன். உண்மையிலேயே பெயரளவில் கணக்கு நேர் செய்ததாக

எழுதியிருந்தால் அதனை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகார் மனுவிலும் சொல்லியிருப்பேன் என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எந்த தேதியில் நாங்கள் மேற்சொன்னவாறு பெயரளவில் நேர்செய்வதாக எங்களுக்குள் பேசிக்கொண்டது எந்த தேதி என்றால் Retirement Deed-ல் கையொப்பம் செய்யும்போது பேசிக்கொண்டோம், இந்த விசயத்தை புகார் மனுவிலும் , வழக்கறிஞர் அறிவிப்பிலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது எனக்கு பாராகான் பேசன் நிறுவனம் கொடுக்கவேண்டிய கடனா , தொகையா என்றால் நான் மேற்படி நிறுவனத்தில் பணிபுரிந்ததற்காகவும், கட்டிட கட்டுமான பணிகள் செய்வதற்காகவும், இயந்திரங்களை நிறுவியதற்காகவும் , பராமரித்தற்காகவும், எனக்கு வரவேண்டிய தொகைக்காக தாக்கல் செய்துள்ளேன். நிறுவனம் எனக்கு கடன்தொகை ஏதும் கொடுக்கவேண்டியதில்லை.

7. பாரகான் பேசன் நிறுவனத்தில் பெயரில் பல்லடம் கிளை , சிட்டி யூனியன் வங்கியில் நடப்பு கணக்கு உள்ளது என்றால் சரிதான். பாரகான் பேசன் நிறுவனத்தின் எந்த ஒரு பணம் தொடர்பான பணபரிவர்த்தனைகள் என்றாலும், நிறுவனத்தின் கணக்கில் உள்ள காசோலையின் மூலமாகத்தான் நடக்கும் என்றால் அவர் அவருடைய தனிப்பட்ட பெயரில் உள்ள கணக்கிலும் , நிறுவனத்தின் பெயரில் உள்ள கணக்கிலும் பணபரிவர்த்தனைகள் நடைபெற்றன. நிறுவனத்தின் பெயரில் தனிப்பட்டு கணக்கு இருக்கும்போது நிறுவனத்தின் வரவு செலவு கணக்கிற்காக எதிரியின் தனிப்பட்ட வங்கி கணக்கில் பணபரிவர்த்தனை வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

8. நிறுவனத்திற்கான பணபரிவர்த்தனைகளை நிறுவனத்தின் பெயரில் உள்ள வங்கிகணக்கில் மட்டுமே செய்யவேண்டும் என்று எ.சா ஆ-1 மற்றும் எ.சா ஆ-2 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா ஆ-12 வங்கி ஸ்டேண்ட்மேண்ட் 01.04.2018 ஆம் தேதிமுதல் 09.09.2018 ஆம் தேதி வரை மட்டுமே கணக்கு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல ம.சா ஆ-11 தாக்கல் செய்துள்ள வருமானவரிக்ககணக்கில் 2018 முதல் 2019 வரை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி அதில் 2017 ஏப்ரல் முதல் 2018 மார்ச் வரையிலான எனது வருமான வரிகணக்கு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாராகான் பாசன் நிறுவன சிட்டி யூனியன் வங்கிகணக்கிலிருந்து 06.01.2018 ஆம் தேதி என்னுடைய வங்கி கணக்கிற்கு ரூ.50 ஆயிரம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி வங்கி ஆவணத்தில் உள்ள விவரம் சரிதான்.

9. மேற்படி எனது வங்கி கணக்கிற்கு அனுப்பப்ட்ட ரூ. 50 ஆயிரத்தை 2018-19 ஆம் ஆண்டிற்கான ம.சா ஆ-11 வருமான வரிக்கணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டியுள்ளேன். மேற்படி 50 ஆயிரம் எனக்கு போக்குவரத்து செலவிற்காக கொடுக்கப்பட்டது. ம.சா ஆ-11 ஆவணத்தில் 50 ஆயிரம் ரூபாய் அனுப்பப்பட்டதை நான் காட்டவில்லை. பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் எதுவும் கிடையாது என்றால் சரிதான். 24.05.2018 ஆம்தேதி நானே என் கைப்பட அறிவிப்பு எழுதி எதிரிக்கும் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு 09.06.2018 ஆம் தேதி தனது வழக்கறிஞர் மூலம் மறுத்து பதிலறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு எதிரி எனக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு. **( 09.06.2018 ஆம் தேதிய பதிலறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் எ.சா ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

10. என்னுடைய 24.05.2018 ஆம் தேதியில் சுயார்ஜித அறிவிப்பில் 22.5 இலட்சம் பாராகான் பேசன் நிறுவனத்திடமிருந்து வரவேண்டியுள்ளதாகவும், கடன் வாங்கியவர்களிடம் கடன் கொடுக்க முடியவில்லை என்றும், அப்படி செலுத்த இயலாவிட்டால் நான் உயிருடன் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும்

சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 09.06.2018 தேதிய எதிரியின் மறுப்பு பதிலறிவிப்பில் நான் பாராகான் பேசன் நிறுவனத்தற்கு இயந்திரங்களை இரண்டாம் விற்பனைக்கு வாங்கி தருவதாக அதிக விலைக்கு வாங்கிக்கொடுத்தன் மூலம் நான் எழுதிக்கொடுத்த Retirement Deed ற்கு பிறகு இயந்திரங்கள் மிகவும் பழுதானதென்றும், நான் அதிகவிலைவைத்து வாங்கிகொடுத்ததாக பணமோசடி செய்ததாகவும், அதனால் நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டதாகவும் கூறி நான் தான் 25 லட்சம் கொடுக்கவேண்டுமென்று எ.சா ஆ-4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. எதிரி பொருளாதாரவசதி படைத்த பணக்காரர் என்றால் அவருடைய பொருளாதாரம் பற்றி எனக்கு தெரியாது. நான் அனுப்பிய சுயார்ஜித அறிவிப்பில் எதிரிகளுக்கு பலகோடி கடன் பெற்றுக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த மனுவில் எனக்கு பொருளாதார ரீதியாக பெரும் இழப்பு ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் பிரிவு 143(A) – மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் மூலம் தாக்கல் செய்த மனுவின் 2வது பக்கத்தில் கண்ட இடைகால நிவாரண தொகை கிடைக்காவிட்டால் பொருளாதார ரீதியாக குடும்பம் நடத்துவதற்கு வழியில்லாமல் போய்விடும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபணவாக்குமூலத்தில் 3வது பக்கத்தில் 7 வது பத்தியில் காசோலை தொகை ரூ10 லட்சத்திற்கு கொடுக்குமளவுக்கு எனக்கு வருமான வழிவகைகள் உள்ளதாக 2017-2018, 2018-2019 ஆம் ஆண்டிற்கான வருமானவரிக்கணக்கு நகல் இணைத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

12. எனது நிரூபணவாக்குமூலத்தில் 3வது பக்கத்தில் 7 வது பத்தியில் எதிரி தரவேண்டிய கடன் தொகையை திருப்பி செலுத்தாததால் பொருளாதார ரீதியாக எனக்கு மிகுந்த இழப்பீடு ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிறுவனம் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்திற்காக , நிறுவனத்திற்கோ, அதன் பங்குதாரர்களுக்கோ நான் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. ஏனெனில் எதிரி அழைத்து கொடுக்கவேண்டிய பணத்திற்காக எதிரியின் தனிப்பட்ட கணக்கில் உள்ள வழக்கு காசோலைகளுடன் சேர்த்து மூன்று காசோலைகள் ரூ.5 லட்சம் வீதம் மொத்தம் 15 லட்சம் எனக்கு கொடுத்ததால் நான் நிறுவனத்திற்கும், பங்குதாரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

13. நான் பாராகான் நிறுவனத்தில் நிர்வாகம் முதற்கொண்டு தகவல் தொடர்பான அனைத்து பணிகளையும் நானே முழுப்பேற்று செய்துவந்தேன் என்றால் நானும் எதிரியும் சேர்ந்துதான் அனைத்து அலுவலக பணிகளையும் செய்தோம். பணபரிவர்த்தனை அனைத்தும் எதிரியின் பெயரில் மட்டுமே இருந்தது. நிறுவன தகவல் தொடர்பான கடித பரிவர்த்தனைகள் சம்பந்தப்பட்ட நபர்களை எனக்கும் நன்கு தெரியும், எதிரிக்கும் நன்கு தெரியும்.கடித பரிவர்த்தனைகள் சம்பந்தப்பட்ட நபர்களை எனக்கு மட்டுமே தெரியும் என்றாலும், எதிரிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. ஒப்பந்த ஆவணங்களின் மூலம் எதிரியின் கையெழுத்து எனக்கு நன்கு பரீட்சயம் என்றால் நான் பார்த்தால் அவருடைய கையெழுத்து என்பது தெரியும். நான் வழக்கில் சொல்வதுபோல எதிரி எனக்கு எந்த ஒரு சூழ்நிலையிலும் காசோலை கொடுக்கவில்லை என்றாலும், வழக்கு காசோலைகள் உட்பட எதிரி கொடுத்தாக சொல்லப்படும் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல.

14. உண்மையிலேயே எதிரி எனக்கு பணம் கொடுக்கவேண்டியது இருந்தால் அவருக்குள்ள பணவசதிக்கு ஒரே காசோலையில் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. எதிரி தனிப்பட்ட முறையில் எந்த ஒரு கடனும் சட்டப்படி எனக்கு கொடுக்க கடமை பட்டவர் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் இருந்த வரவு செலவு கணக்குகள் Paragon Retirement Deed- மூலமாக நேர்

செய்துகொண்டோம் என்றாலும், அதனால் எனக்க எந்தவித தொகையும் எதிரி கொடுக்கவேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. பாரகான் நிறுவனம் சம்பந்தப்பட்ட கடிதம் தொடர்புடைய பணியாளர்கள் எனக்கு நன்கு பரீட்சம் என்பதால் நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை , வழக்கில் சொல்லியுள்ளது போல் 17.08.2018 , 16.08.2018 ஆகிய தேதிகளில் எதிரிக்கும் தகவல் தெரிவித்தும், அவர் அறிவிப்பை பெற மறுத்துவிட்டார் என எழுதவைத்து திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. நான் அனுப்பிய சுயார்ஜித அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி, முறையாக மறுப்பு தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ள எதிரி, மீண்டும் வழக்கறிஞர் மூலமாக வரப்பெற்ற அறிவிப்பை மறுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், அவ்வாறு மறுத்ததாக குறிப்பிட்டுள்ளது வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் எதிரியின் தனிப்பட்ட காசோலையை மோசடியாக எதிரிக்கு தெரியாமல் ஏற்கனவே எடுத்து வைத்திருந்ததில் , ஒரு காசோலையை 29.06.2018 ஆம் தேதி எதிரியின் கையொப்பத்தை நானாகவோ, அல்லது தெரியாத நபர்கள் மூலமாக பூர்த்தி செய்துக்கொண்டு, எதிரியின் வங்கிக்கணக்கில் செலுத்தி தொகை ரூ. 5 லட்சத்தை நான் மோசடியாக எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

16. எதிரி அவரது கணக்கிலிருந்து ரூ. 5 லட்சம் எனது கணக்கிற்கு அனுப்பப்பட்டது தெரிந்தவுடன் என்னை தொடர்புகொண்டு காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொல்லி நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, நானும், எனது மனைவியும் குடும்பத்துடன் மன்னிப்பு கேட்டு பணத்தை திருப்பிக்கொடுத்துவிடுவதாக உறுதி மொழி அளித்ததாலும், வேறு எதாவது காசோலை உள்ளதா என என்னிடம் கேட்டதற்கு நான் கிழித்துவிட்டதாகவும், எதுவும் இல்லை என்றும் சொன்னதால் எதிரி என்னை மன்னித்து நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார் என்றால் சரியல்ல. எதிரியிடம் சொல்லியது போல் அல்லாமல் ஏற்கனவே மறைத்து எடுத்துவைத்திருந்த வெற்றுக் காசோலையை தாங்களாகவே பூர்த்தி செய்து எதிரியின் கையொப்பமிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட என்னுடைய வாக்கறிஞர் அறிவிப்பு ம.சா ஆ.-7- குறித்து எதிரிக்கு உடனே தெரியாத காரணத்தினாலும், நீதிமன்றத்திலிருந்து ஆஜராக சம்மன் கிடைக்கப்பெற்ற பின்பு நீதிமன்றத்திற்கு வந்த பிறகே என்னுடைய மோசடி செய்தி தெரியவந்ததால் நீதிமன்றத்தின் மூலம் வழக்கை பார்த்துக்கொள்ளலாம் என்று எதிரி என்மீது வேறு எந்தவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் சொல்லியதுபோல் எதிரிக்கும் நான் கொடுத்த கடன்தொகை சட்டப்படியான நிலைநிறுத்தக்கூடிய கடன்தொகை என்று கூறியிருப்பது சுத்தபொய் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் எந்த ஒரு சட்டப்படியான மறுபயனும் பரிமாறிக்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்கு காசோலைகளில் கண்ட தொகையை எதிரி எனக்கு கொடுக்கவேண்டிய சட்டப்படியான கடமையோ, பொறுப்போ எதிரிக்கு இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her to be correct.

(S/d. ) N. Meenatchi, B.A.,B.L.,
Judicial Magistrate No:II
Dindigul